இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 17-06-2023

# பாட்னா பயமா?

Don't Create Atmosphere of Fear - என்பது அமலாக்கத்துறைக்கு உச்சநீதிமன்றம் சொன்ன அறிவுரை ஆகும். அதாவது 'அச்சம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டாம்' என்பது ஆகும். அச்சம் நிறைந்த சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே அந்த அமலாக்கத்துறை பா.ஜ.க.வால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதுதான் இந்தியா முழுமைக்கும் நாம் காணும் காட்சிகள் ஆகும்.

பத்து ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு புகாரை வைத்து - இப்போது விசாரணைக்கு வந்து - ஒரே நாளில் 18 மணி நேரம் விசாரணை என்ற பெயரால் சித்திரவதை செய்து - அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இதயச் சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலையை எதற்காக உருவாக்க வேண்டும்? அதற்கான அவசியம் என்ன வந்தது? அமைச்சராக இருக்கிறவர் ஓடிப் போகப் போகிறாரா? லலித் மோடி - நீரவ் மோடிகளைப் போல ஓடிப் போகப் போகிறாரா?

**வருமானவரித் துறையை வைத்து பத்து நாட்களாக கரூரில் சோதனை நடத்துவதும் - அடுத்து அமலாக்கத்துறை வருவதும் - 18 மணி நேரம் சித்திரவதை செய்வதும் - மத்திய பாதுகாப்புப் படை போலீஸாரை தமிழ்நாட்டின் தலைமைச் செயலகத்துக்குள் அனுப்பி வைப்பதும் - இதய நோயால் பாதிக்கப்பட்டவரை உடனடியாக சிறைக்குக் கொண்டுபோகத் துடிப்பதும் - வழக்கு விசாரணைகள் போலத் தெரியவில்லை. அச்சம் ஏற்படுத்த நினைக்கும் வழிமுறைகளாகவே உள்ளன. இதனைத்தான் உச்சநீதிமன்றம், அமலாக்கத் துறைக்கு உணர்த்தியது.**

இதுவரை அமலாக்கத்துறை யார் மீதெல்லாம் பாய்ந்துள்ளது? காங்கிரஸ், திரிணாமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சிவசேனா, பிஜு ஜனதா தளம், ராஷ்ட்ரிய ஜனதா தளம், பகுஜன் சமாஜ், சமாஜ்வாடி கட்சி, தெலுங்கு தேசம் கட்சி, ஆம் ஆத்மி, இந்திய தேசிய லோக் தளம், ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், சி.பி.எம், டி.ஆர்.எஸ். - ஆகிய கட்சிகளின் தலைவர்கள், முக்கியப் பிரமுகர்கள், அமைச்சர்கள், அவர்களது குடும்பத்தினர் மீதுதான் பாய்ந்துள்ளது.

2004-14 காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 112 ரெய்டுகள் நடந்துள்ளன என்றால், பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் 3 ஆயிரத்து பத்து ரெய்டுகள் நடந்துள்ளன. எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பொதுக்கூட்டம் நடத்துவதைப் போல ரெய்டுகள் நடத்தி இருக்கிறார்கள். இதற்குத்தான் அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

அதுவும் பட்டவர்த்தனமாக - ஒளிவுமறைவு இல்லாமல் அமலாக்கத் துறையைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், கர்நாடக காங்கிரஸ் தலைவரும் தற்போதைய துணை முதலமைச்சருமான டி.கே.சிவக்குமார், மகாராஷ்டிரா முன்னாள் உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக், சிவசேனா மூத்த தலைவர் சஞ்சய் ராவத், டெல்லி சுகாதாரத் துறை அமைச்சர் - ஆம் ஆத்மியைச் சேர்ந்த சத்யேந்தர் ஜெயின், மகாராஷ்டிரா சிறுபான்மை நலத்துறை அமைச்சர் நவாப் மாலிக் - இவர்களை திட்டமிட்டு கைது செய்து அடைத்தார்கள். "எங்களுக்கு எதிராக இருக்காதே - அல்லது எங்களோடு சேர்ந்து விடு" என்பதுதான் இந்த கைதுக்கான ஒற்றைக் காரணம் ஆகும்.

ரெய்டிலும் கைது நடவடிக்கையிலும் சிக்கி - பா.ஜ.க.வில் தஞ்சம் புகுந்து - இப்போது புனிதர்களாக ஆகிவிட்ட பலபேரின் பட்டியலை சசிதரூர் வெளியிட்டு இருக்கிறார்.

**★ 300 கோடி ரூபாய் மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நாராயண் ரானே, பா.ஜ.க.வில் சேர்ந்ததும் விசாரணை நிறுத்தப்படுகிறது.**

**★ நாரதா ஊழல் வழக்கில் சிக்கிய சுவெந்து அதிகாரி, பா.ஜ.க.வில் இணைந்ததும் விசாரணை நிறுத்தம்.**

**★ லஞ்ச வழக்கில் சிக்கிய ஹிமந்த பிஸ்வ சர்மா, பா.ஜ.க.வில் இணைந்ததும் விசாரணை நிறுத்தம்.**

**★ அமலாக்கத்துறையால் ரெய்டு நடத்தப்பட்ட ஏக்நாத் ஷிண்டேவின் ஆதரவாளர் பிரதாப் சர்னாய் மீதான வழக்கு மூடப்பட்டது.**

**★ லஞ்ச வழக்கில் லோக் ஆயுக்தாவால் வழக்குப் பதியப்பட்ட எடியூரப்பா, மீண்டும் பா.ஜ.க.வில் சேர்க்கப்பட்டார். - இதுதான் பா.ஜ.க.வின் கறை படிந்த விசாரணை வரலாறுகள் ஆகும்.**

"பா.ஜனதாவில் இணைந்து விட்டால் சி.பி.ஐ. நடவடிக்கை எடுக்காது" என்று வெளிப்படையாகவே சொன்னார் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி.

சாரதா நிதி நிறுவன முறைகேடுகள் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. கொல்கத்தா போலீஸ் கமிஷனர் ராஜீவ் குமாரை சி.பி.ஐ. விசாரித்தது. விசாரிக்க வந்தவர்களையே கைது செய்தார் மேற்கு வங்க முதலமைச்சர். சாரதா நிதி நிறுவன சர்ச்சையில் சிக்கிய ஒருவர் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி பா.ஜ.க.வில் சேர்ந்து கொண்டார். அவரைக் காப்பாற்றி விட்டது பா.ஜ.க. இதனைக் குறிப்பிட்டுப் பேசிய மம்தா பானர்ஜி, "நீங்கள் பா.ஜனதாவில் இணைந்து விட்டால், சி.பி.ஐ., அமலாக்கப்பிரிவு போன்ற விசாரணை முகமைகளிடம் இருந்து பா.ஜனதா கட்சி பாதுகாக்கும். இதற்காகத்தான் இவை போன்ற அமைப்புகளை வைத்துள்ளார்கள்" என்றார்.

"பா.ஜனதா நேர்மையற்ற வழியில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க விரும்புகிறது. சி.பி.ஐ. தேர்தல் ஏஜெண்டாக பயன்படுத்தப்படுகிறது. இது ஜனநாயக விரோதமானது. அரசியலமைப்பு மாண்பிற்கு எதிரானது" என சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் அப்போது சொன்னார். இதுதான் இந்தியா முழுமைக்கும் நாம் பார்க்கும் காட்சிகளாக இருக்கிறது.

**பா.ஜ.க. நேர்மையின் சிகரங்கள் என்றால், பழனிசாமி கும்பலோடு கைகோர்த்து நிற்பார்களா? பழனிசாமி தயவில் கட்சி நடத்திக் கொண்டு ஊழலைப் பற்றி உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசலாமா? அதானி குறித்து நாடாளுமன்றத்தில் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாமல் - அடுத்தவர் ஊழலைப் பற்றிப் பேசுவதற்கான தகுதி வந்துவிடுமா?**

பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகளின் அணிச்சேர்க்கையானது வருகிற சூன் 23ஆம் நாள் பாட்னாவில் நடக்க இருக்கிறது. அதில் திராவிட முன்னேற்றக் கழகம் முக்கியப் பங்காற்ற இருக்கிறது. இந்த நிலையில் தி.மு.க.வை அசைத்துப் பார்க்க நினைக்கிறது பா.ஜ.க. அதற்கு செந்தில்பாலாஜி வழக்கு ஒரு துருப்புச் சீட்டு. அச்சம் நிறைந்த சூழ்நிலையில் பா.ஜ.க. இருப்பதையே இது காட்டுகிறது!





பா.ஜ.க.வின் ஜனநாயக விரோதச் செயலைக் கண்டித்து கோவையில் நேற்று (16.6.2023) மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் டி.ஆர்.பாலு, (பொருளாளர், தி.மு.க.), ஆசிரியர் கி.வீரமணி, (தலைவர், திராவிடர் கழகம்), கே.எஸ்.அழகிரி, (தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி), வைகோ, (பொதுச்செயலாளர், ம.தி.மு.க.), கே.பாலகிருஷ்ணன் (செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநிலக் குழு), ஆர்.முத்தரசன் (செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநிலக்குழு), கே.எம்.காதர்மொகிதீன் (தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), தொல்.திருமாவளவன் (தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), எம்.எச்.ஜவாஹிருல்லா, (தலைவர், மனிதநேய மக்கள் கட்சி), ஈ.ஆர். ஈஸ்வரன் (பொதுச் செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி), தி.வேல்முருகன் (தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி) மற்றும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா கண்டன உரை நிகழ்த்தினர். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் முன்னணியினர் – தோழர்கள் – பொதுமக்கள் என்று பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### பா.ஜ.க.வின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையைக் கண்டித்து

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கண்டன உரை!

## கோவையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற பொதுக்கூட்டம்!

சென்னை, ஜூன் 17–

பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத – மக்கள் விரோத – பழிவாங்கும் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கண்டிக்கும் வகையில் கோவையில் நேற்று (ஜூன் 16ந் தேதி) மாலை "மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்" நடைபெற்றது.

இலட்சக்கணக்கானோர் திரண்ட இந்த மாபெரும் பொதுக்ககூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று கண்டன உரை நிகழ்த்தினர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் புலனாய்வு விசாரணை அமைப்புகளை குற்றச் செயல்களில் தொடர்புடையவர்கள் மீது பயன்படுத்தாமல், தன்னுடைய அரசியல் எதிரிகள் மீது பா.ஜ.க. பயன்படுத்தி வருவதை ஊடகங்கள் புள்ளி விபரங்களுடன் பலமுறை அம்பலப்படுத்தி இருக்கிறது. ஆனாலும் பா.ஜ.க. தலைமை திருந்தவில்லை. வெளிப்படையாக – ஆணவமான முறையில் விசாரணை அமைப்புகளை அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்தி வருகிறார்கள்.

**தமிழ்நாடுதான் பா.ஜ.க.வை பின்னங்கால் பிடறியில் அடிபட விரட்டும் மாநிலம்!**

எல்லா மாநிலங்களிலும் சுற்றிய பழிவாங்கும் படலம், தமிழ்நாட்டுக்கும் வந்துவிட்டது. தமிழ்நாடு என்பது பா.ஜ.க.வை பின்னங்கால் பிடறியில் அடிபட விரட்டும் மாநிலம். இங்கு அவர்களால் எப்போதும், எந்த சூழ்நிலையிலும் வெல்ல முடியாது என்பது மட்டுமல்ல, தனியாக நின்று டெபாசிட்கூட வாங்க முடியாது என்பது தெரியும். அதனால் தான் நேர்வழி இல்லாமல் நேர்மையற்ற வழிகளில் பா.ஜ.க. தனது கீழான செயல்களைச் செய்கிறது.

மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத் தீர்வுத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜியை கடந்த 13 ஆம் தேதி அன்று விசாரணை என்ற பெயரால் சித்திரவதை செய்துள்ளார்கள். நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, இதயச் சிகிச்சை செய்ய வேண்டிய அளவுக்கு நெருக்கடியை உண்டாக்கி விட்டார்கள். விசாரணைக்கு அமைதியாக ஒத்துழைப்புத் தந்தவரையே இந்தளவுக்கு வேண்டுமென்றே தொல்லையையும், நெருக்கடியையும் கொடுத்திருப்பது பழிவாங்குவதே தவிர, விசாரணை அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியை –

அதுவும் அமைச்சரைச் சித்திரவதை செய்வதன் மூலமாக அச்சுறுத்துவது அரசியலே தவிர, விசாரணை அல்ல.

மேலும், தமிழ்நாட்டின் தலைமைச் செயலகத்துக்குள் மத்திய பாதுகாப்புப் படைப் போலீசாரை அழைத்து வருவதுதான் மாநில ஆட்சியின் மாண்பைக் காக்கும் முறையா? இதன் மூலமாக எங்கும், எப்போதும் நுழைந்து எதையும் செய்வோம் என்ற ஆணவப் போக்கே தெரிகிறது. எச்சரிக்கை விடுக்கிறார்களா? மிரட்டுகிறார்களா? இவை எதற்கும் பயப்படு கிறவர்கள் அல்ல நாங்கள்.

**அமித்ஷாவின் சென்னை பயணம் படுதோல்வி என்பதை மறைக்கவே கைது நடவடிக்கை!**

மூன்று நாட்களுக்கு முன்னால்தான் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சென்னைக்கு வந்து சென்றார். அவரது பயண நோக்கமும், பிரச்சாரக் கூட்டமும் படுதோல்வி என்பதை அனைவரும் அறிவார்கள். இதனை மறைப்பதற்காக அமைச்சர் செந்தில் பாலாஜி மீது நடவடிக்கையை பாய்ச்சி இருக்கிறார்கள்.சொராபுதீன் என்கவுண்டர்வழக்கில் சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்தவுடன் குஜராத் உள்துறை அமைச்சராக இருந்து கொண்டே தலைமறைவானவர் அமித்ஷா என்பதை நாட்டு மக்கள் மறக்கவில்லை.

"Don't Create atmosphere of fear" என்று சில வாரங்களுக்கு முன்புதான் உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமலாக்கத்துறையை எச்சரித்து இருந்தார்கள். இப்படி உச்சந்தலையில் உச்சநீதிமன்றம் கொட்டிய பிறகும் பா.ஜ.க.வின் அமலாக்கத் துறை திருந்துவதாகத் தெரியவில்லை. திருத்தும் கடமையும், பொறுப்பும் நாட்டு மக்களுக்கே உண்டு.

பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத – மக்கள் விரோத – பழிவாங்கும் எதேச்சதிகார நடவடிக்கைகளைக் கண்டித்து கோவை மாநகர், சிவானந்தா காலனியில் நேற்று (16.06.2023 வெள்ளிக்கிழமை) அன்று மாலை 5.00 மணி அளவில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் ''மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்" நடைபெறும் என அறிவித்திருந்தது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அறிவித்ததற்கு இணங்க நேற்று மாலை மாபெரும் மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டதத்தில் பா.ஜ.க.வுக்கு இறுதித் தோல்வியைத் தரும் வரையில் நமது மக்கள் பிரச்சாரம் தொடரும் என கட்சித் தலைவர்கள் உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் டி.ஆர்.பாலு, (பொருளாளர், தி.மு.க.),

ஆசிரியர் கி.வீரமணி, (தலைவர், திராவிடர் கழகம்),

கே.எஸ்.அழகிரி, (தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி),

வைகோ, (பொதுச்செயலாளர், ம.தி.மு.க.),

கே.பாலகிருஷ்ணன் (செயலாளர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநிலக் குழு),

ஆர்.முத்தரசன் (செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்மாநிலக்குழு),

கே.எம்.காதர்மொகிதீன் (தலைவர், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்),

தொல்.திருமாவளவன் (தலைவர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி),

எம்.எச்.ஜவாஹிருல்லா, (தலைவர், மனிதநேய மக்கள் கட்சி),

ஈ.ஆர். ஈஸ்வரன் (பொதுச் செயலாளர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி),

தி.வேல்முருகன் (தலைவர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி)

மற்றும் ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி. உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள், பொதுமக்கள் என்று பல்லாயிரகணக்கானோர் திரண்டனர்.

**கூட்டணிக்கட்சித் தலைவர்கள் உரை!**

ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, மற்றும் சி.பி.ஐ. அமைப்புகள் செயல்படுவதாக மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். மோடி அரசின் சதி வேலைகள் தமிழ்நாட்டில் ஒருபோதும் எடுபடாது என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

அமலாக்கத்துறையை ஏவிவிட்டு அமைச்சர் செந்தில் பாலாஜியை அராஜக முறையில் கைது செய்துள்ள பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத மக்கள் விரோத பழிவாங்கும் எதேச்சதிகார நடவடிக்கைகளை கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கோவை மாநகர், சிவானந்தா காலனியில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி!**

இக்கூட்டத்தில் உரையாற்றிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நெருப்பாற்றில் நீந்தி வெற்றி கண்ட இயக்கம் தி.மு.க. என்று தெரிவித்தார். அமலாக்கத்துறையின் மூலம் செந்தில்பாலாஜி துன்புறுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றம்சாட்டினார். இந்தியாவுக்கு வழிகாட்டக்கூடிய இயக்கம் தி.மு.க. என்பதை உணர்ந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு, திட்டமிட்டு, தி.மு.க. மீது பொய் பிரச்சாரங்களை செய்து வருவதாக கூறினார். வருமான வரித்துறை, அமலாக்கத்துறை, சி.பி.ஐ. ஆகியவற்றை திரிசூலம்போல் ஒன்றிய பா.ஜ.க. அரசு பயன்படுத்தி வருவதாகவும், அது தமிழ்நாட்டில் வேலை செய்யாது, ஏனென்றால், இது திராவிட மண் என்று தெரிவித்தார். தலைமைச் செயலகத்தில் சோதனை என்பதை செய்தியாக்க வேண்டும் என்று திட்டமிட்டு ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்பட்டு வருவதாகவும், இதுதான் ஆர்.எஸ்.எஸ். சூழ்ச்சி, ஆரியத்தின் சதி என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறினார்.

**கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி.!**

கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சிக்கு விரைவில் முடிவு கட்ட வேண்டும் என்றார். அமலாக்கத்துறையின் துன்புறுத்தலால் நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் செந்தில் பாலாஜியிடம், மருத்துவமனையில் வைத்து 8 நாள் விசாரிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் அவரது உடல்நலத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார். மிரட்டலுக்கு பணியாத மாநிலம் தமிழ்நாடு, அதுவும் தி.மு.க. அரசு என்றும், நெருப்பாற்றில் பயணிப்பவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்றும் டி.ஆர்.பாலு கூறினார்.

**ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா எம்.பி.!**

கண்டனப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஆ.ராசா எம்.பி., இந்தியாவின் அரசியல் சட்டத்தையும், மதசார்பற்ற கொள்கைகளையும் காப்பாற்றக் கூடியவர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் என, பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் தெரிவித்ததை சுட்டிக்காட்டினார்.

கொங்கு மண்டலத்தில் தி.மு.க. வெற்றி பிரகாசமாக உள்ளதால், அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கொடுமைப்படுத்தி உள்ளதாகவும், அதானி குழும குற்றச்சாட்டு குறித்து நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காமல் பிரதமர் மவுனம் சாதிப்பதாகவும் ஆ.ராசா விமர்சித்தார்.

ஓர் ஆண்டுகாலம் முழுவதும் கலைஞரின் நூற்றாண்டு விழா நடைபெறும் என்றும், அவ்வாறு அடுத்தாண்டு நடைபெறும் கலைஞரின் நூற்றாண்டு விழா மேடையில், பா.ஜ.க. அல்லாத பிரதமர் மேடையில் இருப்பார் என்றும், அப்போது, மோடியும், அமித்ஷாவும் இந்தியாவிலேயே இருக்கமாட்டார்கள் என்றும் ஆ.ராசா எம்.பி., தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி, மதி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர்மொகிதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன் மற்றும் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.